# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-1 — Date : 19.11.2024

Case No. : **O.S. 97/2022** — Nationality : Indian

Name : பாலகிருஷ்ணன் — Religion :

Father's/Husband's Name : அச்சுதன் — Age : 71

Village :

Taluk :

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

25.04.2005ம் தேதி எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே தாவா சொத்தைப் பொறுத்து ஒரு கிரய ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரிதான். ( மேற்படி 25.04.2005 தேதியிட்ட கிரய ஒப்பந்தம் **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி கிரய ஒப்பந்தத்தில் கண்டுள்ள விவரங்கள் சரியானதுதான் என்றால் சரிதான். மேற்படி கிரய ஒப்பந்தத்தில் 2 வது பக்கத்தில் 2 வது பார்ட்டியிடம் இருந்து இன்றைய தேதியில் வாங்கியுள்ள அட்வான்சுடன் மேலும் ரூ.50,310/- நஷ்ட ஈடாக சேர்த்து ரூ.1,00,620/-ஐ 1வது பார்ட்டி 2 வது பார்ட்டிக்கு கொடுத்து தீர்க்க வேண்டும் என்றும் அப்படி கொடுத்து தீர்க்கும் வரையில் கிரய சொத்து 2 வது பார்ட்டியின் பொறுப்பில் இருக்க வேண்டியது என்றும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரய ஒப்பந்தத்தில் 3 மாத கால கெடுவும் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி கிரய ஒப்பந்தத்தில் நான் 1வது பார்ட்டி என்றாலும் பால்ராஜ் 2 வது பார்ட்டி என்றாலும் சரிதான். மேற்படி ரூ.1,00,620/-ஐ 1ம் பிரதிவாதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். கிரய ஒப்பந்தம் காலாவதி ஆகிவிட்டதால் 1ம் பிரதிவாதியிடம் இடத்தை திருப்பி தரக்கோரி

எழுத்து மூலமாக அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை வாய்மொழியாக பலமுறை கேட்டேன். நிலத்தில் இறங்க வேண்டாம் என்று சொன்னேன். நான் நேரடியாகவும் வழக்கறிஞர் மூலமாகவும் சொத்தை திருப்பி தரக்கோரி 1ம் பிரதிவாதியிடம் கேட்டேனா என்றால் சொத்து என்னிடம்தான் இருந்து வந்தது. 2005ம் ஆண்டு தாவா சொத்து என்னிடம் இருந்து வந்தது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தவிர வேறு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வி.ஏ.ஓ சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி என்ன பதில் தாக்கல் செய்துள்ளார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். என்ன பதில் தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா சொத்தை 1ம் பிரதிவாதி பெயருக்கு பதிவு செய்து தரக்கோரி பதில் தாக்கல் செய்துள்ளார். வேறு என்ன விவரம் சொல்லியுள்ளார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. சேங்கனூர் கிராமத்தை சேர்ந்த ரத்தினசாமி மகன் சிவானந்தம் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். கலியபெருமாள் மகன் லெட்சுமணன் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதியின் குடும்பத்தினரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2ம் பிரதிவாதியை எதற்காக வழக்கில் சேர்த்தேன் என்றால் அவர் 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து என்னிடம் சண்டைக்கு வந்ததால் சேர்த்தேன். என்ன சண்டை போட்டார்கள் என்றால் கிரய ஒப்பந்தப்படி பதிவு செய்து கொடுக்கிறாயா இல்லையா என்று கேட்டு சண்டை போட்டார்கள்.

3. 20.08.2022ம் தேதி என்ன நடந்தது என்றால் பிரதிவாதிகள் கிரய ஒப்பந்தப்படி கிரயம் செய்து தருமாறு கேட்டார்கள். நான் காலக்கெடு முடிந்துவிட்டதால் அதைப்பற்றி பேசாதீர்கள் என்று சொல்லிவிட்டேன். 27.08.2022ம் தேதி என்ன நடந்தது என்றால் நான் தாவா சொத்தில் நடவு செய்து கொண்டிருந்தபோது பிரதிவாதிகள் ஆட்களுடன் வந்து நடவு

செய்யக்கூடாது என பிரச்சனை செய்தார்கள். நான் அங்கிருந்த நபர்களை அழைத்தேன். அவர்கள் வந்து பிரச்சனை வேண்டாம் என்று கூறி நீதிமன்றத்தில் பார்த்து கொள்ளுங்கள் என்று கூறி அனுப்பினார்கள். எனது தரப்பில் என் மகன், மருமகள் ஆகியோர் அங்கிருந்தார்கள் என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் சேர்ந்துதான் சொத்தின் சொந்தக்காரர்கள் என்ற முறையில் சாகுபடி செய்து வருகிறோம் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்குள் குத்தகைதாரர்கள் யாரும் உள்ளார்களா என்றால் இல்லை. நாங்கள்தான் உரிமையாளர்கள்.

4. வாசாஆ 4 ஆவணத்தில் சர்வே எண் உள்ளதா என்றால் இல்லை. வாசாஆ 1 முதல் வாசாஆ 5 வரை உள்ள ஆவணங்கள் சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் சரியாக ஞாபகமில்லை. 1ம் பிரதிவாதியின் மனைவி பெயர் வளர்மதி என்றால் சரிதான். 2005ம் ஆண்டிற்கு பிறகு தாவா சொத்து எனது அனுபவத்திலோ எனது குடும்பத்தாரின் அனுபவத்திலோ இல்லை என்றால் சரியல்ல. 2005ம் ஆண்டிற்கு பிறகு 1ம் பிரதிவாதி தாவா சொத்தினை பல்வேறு நபர்களுக்கு உள் சாகுபடிக்கு கொடுத்து ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது என்றாலும் அதனை தெரிந்து கொண்டே மறைத்து நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் தாவா சொத்து 2ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வந்தது என்றாலும் அதனால்தான் அவரை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த காலத்தில் 2ம் பிரதிவாதிதான் சாகுபடி செய்து வந்ததாக 2ம் பிரதிவாதி எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் தாவா சொத்து அவருடைய சாகுபடியில் இருந்து வருவதாக சொல்லியுள்ளாரா என்றால் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில்தான் இருந்து வருகிறது. தாவா சொத்தின் அனுபவமும், சுவாதீனமும்

என்னிடம் இல்லாததால் நான் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் தாவா சொத்து எனது அனுபவத்தில் இருந்தது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு எந்தவித பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.